# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure**

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.555/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.10.சந்திரன்** |
| **Father's Name** | : **துரைராஜ்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.07.2019**

**மு.வி:**

நான் தற்போது விருதுநகர் மாவட்ட தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 03.02.2014 ஆம் தேதி 23 மணிக்கு எழுமலை காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பொறுப்பிலிருந்தபோது எழுமலையை சேர்ந்த செந்தில்குமார் மனைவி காயத்திரி என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகார் மனுவை பெற்று எழுமலை காவல் நிலைய குற்ற எண்.17-14 இதச பிரிவு 380 படி முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5.** முதல் தகவல் அறிக்கையின் அசலை இந்நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

கு.வி:

சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் அரை கி.மீ இருக்கும். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு நடந்து வந்தால் சுமார் 10 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணைக்கு அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கையை வைத்தேன். இந்த வழக்கின் குற்றத்தை சார்பு ஆய்வாளர் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய அதிகாரமுள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு அதிகாரம் இருக்கும் பட்சத்தில் நான் விசாரணை செய்யாமல் ஆய்வாளரிடம் விசாரணைக்கு அனுப்பிய காரணம் என்னவென்றால் அதைப்பற்றி கருத்து தெரிவிக்க இயலாது. எதிரியை அவரது உறவினர்கள் வீட்டில் தேடியதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு யார் யார் வீட்டில் தேடிப்பார்த்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1

கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகாரில் எதிரி எனது மகள் கரிஷ்மாவிடம் படுக்கை அறையில் விளையாடிக்கொண்டிந்தார் என்ற விபரம் இடைசொறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ம.வி:

இல்லை.